TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066951

1. District மாவட்டம் திருவாரூர் PS காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு FIR No மு.த.அ. எண் 01/2019 Date நாள் 08-02-2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act (Amendment) 2018
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : ~~30.1.19~~ 31.1.19 Date to நாள் வரை : 08.02.2019 / 10.00 hrs
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : 08.02.2019 / 1300 hrs Complainant am need
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 08.02.2019 / 1400 hrs FIR registered

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடகிழக்கு, 26 km
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தேசிய நெல் கொள்முதல் நிலையம் சங்கர கொத்தங்குடி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. மதன் மோகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. கிருஷ்ண மூர்த்தி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27-8-1981 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் டிரைவர் (g) Address : முகவரி வடக்குத் தெரு, கோவிந்தசேரி, பேரளம் (PO) நன்னிலம் (TK) திருவாரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ரமேஷ், கொள்முதல் பணியாளர் / BC, தேசிய நெல் கொள்முதல் நிலையம், சங்கரகொத்தங்குடி. பேரளம், நன்னிலம். TK.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான் 08.02.2019ம் தேதி 13.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.மதன்மோகன், த/பெ கிருஷ்ணமூர்த்தி, வடக்கு தெரு, கோவிந்தசேரி, பேரளம் PO, நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: கி. மதன்மோகன், த/பெ. கிருஷ்ணமூர்த்தி, வடக்குத்தெரு,கோவிந்தசேரி, பேரளம் (PO), நன்னிலம் (TK), திருவாரூர் மாவட்டம். பெறுநர் : ஆய்வாளர் அவர்கள். ஊழல் தடுப்புத் துறை. திருவாரூர். அய்யா... நான் பேரளம் கோவிந்தச்சேரி கிராமத்தில் வசிக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு பேரளம் கடுவங்குடி கிராமத்தில் 10 ஏக்கர் விவசாய நிலம் எனது அம்மா உமாமகேஸ்வரி பெயரில் உள்ளது. இதில் இந்த வருடம் CR-1009 நெல் விதைத்து கடந்த 28.01.19 மற்றும் 29.01.19 ஆகிய தினங்களில் அறுவடை செய்தோம். அறுவடை செய்த நெல்லை 30.01.2019 அன்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு கி.மதன்மோகன்
08/02/2019

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
08/02/2019

Name: பெயர் கிரா.தமிழ்ச்செல்வி
Rank: நிலை ..................... No. எண் .........
காவல் ஆய்வாளர்
V&AC, திருவாரூர்

சக்கர கொத்தங்குடியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 102 சிப்பம் நெல் போட்டோம். அதற்கு ஒரு சிப்பத்திற்கு ரூ.30 வீதம் 3,060 பணம் கொண்டுமென்று கொள்முதல் பணியாளர் திரு. ரமேஷ் என்பவர் லஞ்சமாக வாங்கினார். மறுநாள் 31.01.2019 ந் தேதியன்று இதே நிலையத்தில் 150 சிப்பம் நெல் போட்டோம், அதற்கு ஒரு சிப்பத்திற்கு ரூ.30 வீதம் ரூ.4,500 மற்றும் டீ செலவுக்கு ரூ.200 ம் மற்றும் 9 மரக்கால் நெல்லும் உதவியாளர் ராஜா என்பவர் வாங்கி கொள்முதல் பணியாளர் திரு. ரமேஷிடம் கொடுத்தார். நெல்லை அறுத்து கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு போய் விட்டால் நெல் பிடிக்காமல், வெளியில் கடந்தால் திருட்டு போய் விடும், மழை பெய்தால் நெல் வீணாகிவிடும் என்பதாலும் நெல்லை பாதுகாக்க தொடர்ந்து நானும் எனது அம்மாவும் நேரடி கொள்முதல் நிலையத்தில் வெளியே இரவும் பகலும் தங்க வேண்டும் இதனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இந்த பணத்தை கொடுத்தேன். இதற்கு எனது அம்மாவின் தோட்டை கொல்லுமாங்குடி அபபாம்பிகை பைனான்ஸ் ல் அடகு வைத்து தான் கொடுக்க முடிந்தது. மேற்படி பணம் கொடுத்த விபரம் எங்களிடம் விவசாய வேலை பார்க்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.முனுசாமி மற்றும் கடுவங்குடியை சேர்ந்த ராஜமாணிக்கம் ஆகியோருக்கு தெரியும். மேற்படி திரு ரமேஷ் என்னிடம் பணம் வாங்கும் போது இருவரும் அருகில் தான் இருந்தார்கள். 02.02.2019 ந் தேதியன்று மேற்படி நிலையத்திலேயே 44 முட்டை நெல் போட்டேன் அதற்கும் ரூ.30 வீதம் ரூ.1.320 மேற்படி ரமேஷ் கேட்கிறார், 30.01.2019 மற்றும் 31.01.2019 ந் தேதி போட்ட நெல்லுக்கு பில் கொடுத்து விட்டார். 02.02.2019 ந் தேதி போட்ட 44 முட்டைக்கு இன்னும் பில் தரவில்லை, ஆனால் இதற்கு பணம் கொடுத்தால்தான் பில் தருவேன் என்று சொல்கிறார் மேலும் இதுவரை போட்ட நெல் முட்டைகளுக்கு பணத்தை வங்கியில் ஏற்றிவிட காலதாமதம் செய்வேன் என்று சொல்கிறார். மேற்படி ரமேஷ் என்னிடம் பணம் கேட்ட விபரத்தை எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். அதற்கான CD மற்றும் நான் நெல் போட்டதற்கான பில்களின் நகல்களை இணைத்தும் ஏற்கனவே சென்னை ஊழல் தடுப்புத்துறை இயக்குனருக்கு கடந்த 04.2.2019ம் தேதி மனு ஒன்று துரித தபால் மூலம் அனுப்பியுள்ளேன். இன்று 08.02.2019ம் தேதி காலை 10.00 மணியளவில் கொத்தங்குடி நேரடி நெல்கொள்முதல் நிலையம் சென்று கொள்முதல் பணியாளர் திரு.ரமேஷ் அவர்களை பார்த்து ஏற்கனவே போட்ட நெல்லுக்கு வங்கியில் பணம் ஏறவில்லை என்றும் 02.02.2019ம் தேதி போட்ட நெல்லுக்கு பில் தரவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் 30.01.2019ம் தேதி போட்ட நெல்லுக்கு பணம் ஏத்தி விட்டாச்சி வங்கிக்கு போயி பாருங்க 02.02.2019ம் தேதி போட்ட முட்டைக்கு ரூபாய் 1320 கொடுத்து விட்டு பில்லு வாங்கிக்கங்க, இந்த பணம் கொடுத்தால்தான் மீதி நெல்லுக்கான பணத்தை வங்கியில் ஏத்தி விடுவேன் என்று சொல்லி விட்டார். அதனால் வங்கிக்கு சென்று பார்த்தேன் 30.01.2019ம் தேதி போட்ட 102 நெல் முட்டைக்கு ரூ.73,440/- பணம் எனது அம்மா உமாமகேஷ்வரியின் வங்கி கணக்கில் ஏறி இருந்தது. அதில் பணம் இன்று எடுத்துள்ளேன். மேற்படி BC கொள்முதல் பணியாளர் திரு.ரமேஷ் என்னிடம் கேட்ட லஞ்ச பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை. அவர் கேட்ட ரூ.1320-ஐ கொண்டு வந்துள்ளேன். இதற்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க

வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நான் செல் போட்டதற்கான பில்களின் நகல்களை, நான் ஏற்கனவே சென்னை ஊழல் தடுப்புத்துறை இயக்குனருக்கு அனுப்பிய மனு நகல், வங்கி கணக்கு புத்தக பதிவு நகல் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/-. கி.மதன்மோகன் தேதி 08.02.2019.

அய்யா, மேற்படி புகார் 08.02.2019ம் தேதி 13.00 மணிக்கு பெறப்பட்டது. இப்புகார் குறித்தும், புகார்தாரர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எதிரியின் முன் நடத்தைகள் பற்றி விசாரணை செய்யப்பட்டது. வழக்கின் உண்மை தன்மையை உறுதிபடுத்திய பின்பு இப்புகார் மீது இன்று 08.02.2019ம் தேதி 14.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 01/2019 பிரிவு 7 of Prevention of corruption (Amendment) Act 2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஒப்பம். திருமதி.இரா.தமிழ்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர் தேதி 08.02.2019.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி. திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

[signature] 08.02.2019
(R.Tamilselvi)
Inspector of police
VSAC, Thiruvarur